 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) முதலாம் தவணைப் பரீட்சை – 2024**
**General Certificate of Education (Adv. Level) 1 st Term Exam - 2024**

| மனைப்பொருளியல் - I<br>Home Economics - I | Grade 12 | 28 T | I | மூன்று மணித்தியாலமும் பத்து நிமிடமும்.<br>Three Hours and Ten Minutes |
|---|---|---|---|---|

1. மனித தேவைக்கமைய முகாமை செய்யப்பட்ட சூழல்
   (1) சிறப்பான வாழ்க்கைச்சூழல்
   (2) பௌதீக வாழ்கைச்சூழல்
   (3) உள்ளகவெளி
   (4) புறவெளி
   (5) சமூகச்சூழல்

2. மனிதன் தனது வாழ்விடமாக ஒதுக்கிக் கொள்ளும் மூடிய வெளி
   (1) சிறப்பான வாழ்க்கைச்சூழல் (2) பௌதீக வாழ்கைச்சூழல் (3) உள்ளகவெளி
   (4) புறவெளி (5) நகரப்புறச்சூழல்

3. யாதேனுமொரு ஆக்கத்தின் மேற்பரப்பினை தொட்டுணரும் தன்மை
   (1) கோடு (2) வடிவம் (3) இழையமைப்பு
   (4) நிறம் (5) சமநிலை

4. ஓவியக்கலைஞர்கள் தமது படைப்புக்களின் விகிதசமத்தை ஏற்படுத்த பயன்படுத்தும் நுட்பம்
   (1) Golden Rule (2) Emphasis (3) Value
   (4) Point (5) saturation

5. கட்டிட நிர்மாணிப்பில் தரநியமத்தில் கருத்திற் கொள்ளப்படாத விடயம்
   (1) சௌகரியம் (2) சூழற்பாதுகாப்பு (3) வீண்விரயம் குறைத்தல்
   (4) காபன் விடுவிப்பு (5) பயன்படுத்துவோரின் பாதுகாப்பு

6. கட்டிடம் அமைப்பதில் செங்கற்சுவர் எத்திசைக்கு பொருத்தமானது
   (1) வடக்கு –தெற்கு (2) கிழக்கு –மேற்கு (3) வடக்கு –கிழக்கு
   (4) மேற்கு –வடக்கு (5) தெற்கு –வடக்கு

7. இயற்கைச் சூழலினை நுணுக்கமாக மாற்றியமைப்பதன் மூலம் செய்யும் வடிவமைப்பு
   (1) தாவர வகை (2) கூறுகள் (3) மென்நிலத்தோற்றம்
   (4) வன்நிலத்தோற்றம் (5) அச்சுக்கள்

8. நிறச்சக்கரத்தில் உள்ளடங்காத நிறம்
   (1) நீலம் (2) சிவப்பு (3) மஞ்சள்
   (4) கறுப்பு (5) பச்சை

9. கலையின் வடிவமைப்புக் கோட்பாடுகளில் ஒன்று
   (1) நிறம் (2) கோடு (3) சந்தம் (3) இழையமைப்பு (4) வடிவம்

kalvi.lk

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

10. இலங்கையில் அமைந்த கட்டிடத் தொகுதியில் சுதேச மரபில் உள்ளடங்குவது
(1) தலதா மாளிகை (2) அரும்பெருங்காட்சியகம் (3) வாடிவீடு
(4) ஒல்லாந்தர் கோட்டை (5) காளிக்கோட்டை

11. அடினின்,பிரிடொக்சின், அடினோசின் என்பன முறையே அமையும் விற்றமின்கள்
(1) B1,B2,B3 (2) B4,B6,B8 (3) B7,B1,B9 (4) B9,B10,B11 (5) B6,B7,B8

12. A – அயடீன் B –பொட்டாசியம் ஐதரொட்சைட்டு
C –செப்பு சல்பேற்று D - சூடான் -3 கரைசல்
E – பெனடிக்கரைசல்
தரப்பட்ட சோதனைப் பொருட்களில் கொழுப்பினை இணங்காண சோதனைப் பொருள் குறிக்கும் எழுத்து
(1) A (2) B (3) C (3) D (5) E

13. பால் உயிரியல் பெறுமானம் கொண்ட உயர்வான நிறையுணவாக காணப்படினும் இவ்வுணவில் பற்றாக்குறையாக காணப்படும் போசனைப்பொருள்
(1) விற்றமின் C (2) இரும்பு (3) நாகம் (3) அயடீன் (5) செலனியம்

14. அங்கிகளின் உடலில் இயற்கையாகக் காணப்படும் அமினோ அமிலங்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 30 (3) 25 (3) 20 (5) 32

15. தனிநிரம்பாக் கொழுப்பமிலம்
(1) தியரிக்கமிலம் (2) பாமிற்றிக்கமிலம் (3) லோரிக்கமிலம்
(4) லினோ லெயிக்கமிலம் (5) ஒலேயிக்கமிலம்

16. உடலுக்கு அத்தியவசியமான பல்நிரம்பாக் கொழுப்பமில வகை முறையே
(1) ஒமேக்கா 3, ஒமேக்கா 7 (2) ஒமேக்கா 3 , ஒமேக்கா -4 (4) ஒமேக்கா 6, ஒமேக்கா 3
(4) ஒமேக்கா 3, ஒமேக்கா 6 (5) ஒமேக்கா 4, ஒமேக்கா 5

17. பித்தத்தை உற்பத்தி செய்து கொள்வதுடன் கொழுப்பினை குழம்பாக்க உதவும் சுரப்பி எது
(1) இரைப்பை (2) சதையி (3) முன்சிறுகுடல் (3) பித்தப்பை (5) ஈரல்

18. இலங்கையில் போசாக்கு கொள்கை தொடர்பாக விசேட வர்த்தமானி வெளியிட்ட ஆண்டு
(1) 1683 (2) 1986 (3) 2010 (4) 2015 (5) 2011

19. இலிப்பிட்டினால் ஆக்கப்படும் ஓமோன்கள்
(1) ஈஸ்ரஜன், தைரொட்சின்
(2) ஈத்திரசன், கோட்டினேசன்
(3) அன்ரஜன், ஈஸ்ரஜன்
(4) தெஸ்தெஸ்தரோன், பெப்சின்
(5) அன்ரஜன், இன்சுலின்

20. குருதியில் காணப்படுவதுடன் $O_2, CO_2$ என்பனவற்றை கொண்டு செல்வதுமான புரதம்
(1) மயோசின் (2) அக்ரின் (3) ஈமோகுளோபின் (4) இலைசீன் (5) அக்லின்

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

21. பயறு கலந்த பாற்சோற்றில் புரதம் பூரணப்படுத்தல் எனும் செயற்பாடு நடைபெறுகின்றது. இச் செயற்பாட்டில் கிடைக்கும் அமினோ அமிலங்கள் முறையே

(1) லைசீன், வலின் (2) திருத்தோபன், திரியோனைன்
(3) இலாஸ்ரின், மெதியோனின் (4) இலைசீன், மெதியோனின்
(5) திருத்தோபன், இலைசீன்

22. புவி மீது பரவலாகக் காணப்படும் சேதன மூலக்கூறு

(1) தானியங்கள் (2) மாப்பொருள் (3) செலுலோசு (4) குளுக்கோசு (5) கிளைக்கோஜன்

23. நாளாந்த சக்தித் தேவையில் புரதம் மூலம் எத்தனை வீதத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்

(1) 15 -20 % (2) 15 -18% (3) 25-30% (4) 10 -15% (5) 18-20 %

24. பின்வரும் அமினோ அமிலங்களில் அத்தியவசியமற்ற அமினோ அமிலம்

(1) லியூசின் (2) திரியோனின் (3) சிற்றீன் (4) வலின் (5) லைசீன்

25. இலிப்பேசு எனும் நொதியத்தினை சுரக்கும் உறுப்பு எது

(1) ஈரல் (2) முன்சிறுகுடல் (3) இரைப்பை (4) சதையி (5) பித்தப்பை

26. அமைலோசு, அமைலோபெக்தின் சங்கிலியினால் உருவாக்கப்பட்டுள்ள போசணை எது

(1) புரதம் (2) கொழுப்பு (3) மாப்பொருள் (4) கனியுப்பு (5) விற்றமின்

27. உயரத்திற்கு பொருத்தமான நிறையுள்ளது என்பதை காட்டும் BMI

(1) 18.5 க்கு குறைவு (2) 18.5 -24.9 (3) 18.5 -30.0
(4) 18.5 -30க்கு மேல் (5) 30க்கு மேல்

28. மரஸ்மஸ் நோயின் நிலைமை கூடுதலாக எவ்வயதுப்பிரிவினருக்கு ஏற்படும்

(1) 5 வயது (2) 6 வயது (3) 3-5 வயது
(4) 5-7 வயது (5) 1 வயதிலும் குறைவான

29. இலங்கையில் பரவலாகக் காணப்படும் நுண்போசணைக் குறைபாடு அல்லாத தொகுதி

(1) இரும்புச் சத்துக் குறைபாடு
(2) விற்றமின் A குறைபாடு
(3) விற்றமின் E குறைபாடு
(4) அயடீன் குறைபாடு
(5) சிங்கு குறைபாடு

30. மாணவர்களால் வழங்கப்பட்ட கூற்று

அதிக களைப்பு
உடல் வளர்ச்சி குறைவு
இலகுவில் நோய்க்கு ஆளாதல்

மேற்கூறப்பட்ட அறிகுறி எந்நோயினுடையது

(1) கண்டக்கழலை (2) மிகையூட்டம் (3) குறையூட்டம் (4) மாலைக்கண் (5) குருதிச்சோகை

Education கல்வி අධ්‍යාපන

 முழுப் பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 1. வாழ்க்கைச் சூழல் நிர்மாணிப்பின் முக்கியத்துவ அம்சங்கள் 2 தருக
   2. சூழல் வடிவமைப்பின் போது பௌதீகச் சூழல் இரண்டாக வகுக்கப்படும் பௌதீகச் சூழல் வகைகளைக் குறிப்பிடுக
   3. வீட்டின் உட்புற அழகுபடுத்தலுக்காக பயன்படுத்தப்படும் ஓவியக்கலை நிறத் தொகுதிகளில் 2 நிறத் தொகுதியினைக் குறிப்பிடுக
   4. மாப்போசணைக் கூறுகளில் ஒன்றான காபோவைதரேற்றில் ஐதரசன் ஒட்சிசன் அடங்கியுள்ள விகிதம் யாது?
   5. காபோவைதரேற் வகைகளில் ஒன்றான பல்சக்கரைற்றின் வகைகள் 2 குறிப்பிடுக
   6. போலிக்கமிலம், குளுட்டமிக்கமிலம் என்பவற்றில் காணப்படும் விற்றமின் B வகைகளைக் குறிப்பிடுக
   7. இரைப்பைச் சுவருக்கு சேதம் விளைவிப்பதும் இரைப்பைச் சாற்றில் அடங்கியுள்ளதுமான பதார்த்தங்கள் எவை?
   8. அல்லூட்டத்தின் இரு பிரிவுகளும் எவை?
   9. புரத சக்தி குறையூட்டம் என்றால் என்ன?
   10. என்புக் கோறை ஏற்படக் காரணம் யாது 2 குறிப்பிடுக.

2. (i) உள்ளக வெளி நிர்மாணிப்பு என்றால் என்ன?
   (ii) சூழல் சார் வடிவமைப்பின் போது அவதானிக்க வேண்டிய பயன்பாட்டுக் காரணிகள் 3 குறிப்பிடுக.
   (iii) எண்ணக்கரு என்பதை விளக்குக.

3. (i) எண்ணக்கரு சார்ந்த அணுகுமுறையில் தொழிற்படு தன்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
   (ii) கட்டடம் ஒன்றை அமைக்கும் போது உள்ளக வெளியை வடிவமைப்பதன் முக்கியத்துவம் மூன்று குறிப்பிடுக
   (iii) புறவெளி வடிவமைப்பில் நிலத்தோற்ற வகைகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக

4. (i) புரத இயல்பு கெடல் என்றால் என்ன?
   (ii) உணவுச் சமிபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
   (iii) உணவு வேளைகளில் பழங்களை உள்ளெடுப்பதன் காரணங்கள் 4 குறிப்பிடுக.

5. (i) உணவுச் சமிபாடு என்பதை விளக்குக
   (ii) வாயினுள் சமிபாட்டுக்கு உதவும் பகுதிகளையும் அவற்றின் தொழில்களையும் குறிப்பிடுக
   (iii) உணவுக் கூம்பகத்தினை வரைந்து நாளாந்தம் உள்ளெடுக்க வேண்டிய உணவு வகைகளின் அளவுகளைக் குறிப்பிடுக

6. (i) உடல் கொழுத்த நிலை காரணமாக ஏற்படக் கூடிய தொற்றா நோய்களைக் குறிப்பிடுக.
   (ii) நீண்ட காலக் குறையூட்டம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 3 தருக
   (iii) போசணைப் பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளும் வாழ்க்கைக் கோலங்கள் எவை? நான்கு தருக

7. பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக
   (i) வடிவமைப்பின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக
   (ii) உள்ளெடுக்கும் அளவின் அடிப்படையில் நுண்போசணைக் கூறுகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக
   (iii) உணவிலுள்ள போசணைக் கூறுகளும் அவற்றை இணங்காண உதவும் இரசாயனப் பொருட்களையும் விளக்குக
   அல்லூட்ட நிலையும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் விளக்குக.

Education கல்வி අධ්‍යාපන

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page